1984 மார்ச் 10]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) இக் கோரிக்கையை அரசு ஆராய்ந்து 1983-84 ஆம் கல்வியாண்டில் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த அனுமதி வழங்கப்படவில்லை.

மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திற்கு ஆண்டுதோறும் அரசால் வழங்கப்படும் மானியத்தொகை.

248—(*வினா எண். 19855)—திரு. இரா. முத்தையா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை—காமராசர் பல்கலைக் கழகத்திற்கு அரசு ஆண்டுதோறும் வழங்கும் மொத்த மானியத் தொகை எவ்வளவு?

(ஆ) சென்னைப் பல்கலைக் கழகத்திற்கும், மதுரைப் பல்கலைக் கழகத்திற்கும் வழங்கப்படும் இத்தகைய நிதி உதவிகளில் ஏதேனும் வேறுபாடு உள்ளதா ?

(இ) ஆம எனில், சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு வழங்கப்படும் மானியத் தொகை அளவு வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ)—மதுரை-காமராசர் பல்கலைக் கழகத்திற்கு 1980-81ம் ஆண்டு வரை மொத்த மான்யமாக ரூ. 18.00 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டு வந்தது. மொத்த மானியம் ஆண்டு ஒன்றுக்கு இது ரூ. 27.00 இலட்சமாக 1981-82-லிருந்து உயர்த்தப்பட்டது. இதுதவிர, 1981-82ல் ரூ. 3,91,320, 1982-83ல் ரூ. 17,46,724ம் தனித்தனி திட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) ஆம்.

(இ) அந்தந்த பல்கலைக் கழகத்தின் தேவை மற்றும் நிதி வசதிக்கேற்ப மானியம் வழங்கப்படுவதால் ஒன்றுக்கொன்று ஒப்பிடுதல் முடியாது.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, இந்த மதுரை காமராஜர் பல்கலைக் கழகம் வளர்ச்சியிலே முன்னேறிக் கொண்டிருப்பதால் இப்போது கொடுத்து வரும் உதவித் தொகை போதுமானது அல்ல என்று சொல்கிறார்கள் அதனுடைய வளர்ச்சிக்குத் தக்கவாறு உதவி அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே' வளர்ச்சிக்கு ஏற்பத் திட்டங்கள் போடுகிறார்கள். தனித் தனியாக திட்டங்களுக்கு ஏற்ப நாமும் பணம் தருகிறோம் ; நாம் மட்டுமல்லாமல் பல்கலைக் கழக மானியக் குழுவும் பணம் தருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 249 முதல் 253 வரை மாண்புமிகு அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்படுகின்றன.

தஞ்சை மாவட்டத்தில் 1981—82 துவக்கப்பட்ட புதிய பேருந்து வழித்தடங்கள்.

254—(*வினா எண். 17364)—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் 1981-82 ஆம் ஆண்டில் புதிதாகத் துவக்கப்பட்ட புதிய பேருந்து வழித் தடங்கள் எத்தனை ?

(ஆ) அவைகளுள் போக்குவரத்துக் கழகம் மூலம் எத்தனை பேருந்துகள் விடப்பட்டன ?

(இ) தனியார் மூலம் எத்தனை பேருந்துகள் விடப்பட்டன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) தஞ்சை மாவட்டத்தில் 1981-82 ஆம் ஆண்டில் புதிதாக பதினெட்டு வழித் தடங்கள் துவக்கப்பட்டன.

(ஆ) அவற்றுள் 12 வழித்தடங்களில் 12 பேருந்துகளும், பலமுனை உரிமம் வழங்கும் திட்டத்தின் கீழ் (அதாவது ஒரே பேருந்து இரண்டு வழித்தடங்களில் செல்ல அனுமதிக்கப்படல்) 6 வழித்தடங்களில் 3 பேருந்துகளும் ஆக 18 வழித்தடங்களில் 15 பேருந்துகள் கும்பகோணம் சோழன் போக்குவரத்துக் கழகத்தினரால் விடப்பட்டுள்ளது.

(இ) தனியார் மூலம் பேருந்து எதுவும் விடப்படவில்லை.